egistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 43 — No. 4

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 43 | சாதாரண சித்திரை 1970 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை

இதழாசிரியர் : மூ. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் கிழமாடவீதி 12 ஆம் எண்ணுள்ள சமாஜ அலுவலகத்தில் 26-4-70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக் கூட்டம், ஆங்கில சைவ சித்தாந்த இதழ் முன்னேற்றம் முதலியனபற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர். (செயலாளர்)

திரு. காய்சினவழுதி, ("திருவள்ளுவரகம்", எரங்காட்டுப்பாளையம், புன்செய்ப்புளியம்பட்டி அஞ்சல், கோவை மாவட்டம்) அவர்களும், திரு. சுப. கனகசபை செட்டியார், (D-51, 9 ஆவது கிராஸ் W. E., தில்லை நகர், திருச்சி-3) அவர்களும் நம் சமாஜ ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நம் சமாஜப் பேரன்பர் திரு. சொ. நாராயணன் செட்டியார் அவர்கள், தம் திருமகனார் திரு. சிங்காரவேலனார் அவர்களுக்கு 9-2-70 ஆம் நாள் நிகழ்ந்த திருமணத்தின் போது, சமாஜத்திற்கு நன்கொடையாக அளித்த ரூ. 5-00ம் வரப் பெற்றது. அவர்கள்சமயக் காணிக்கைக்கு நன்றியும் பாராட்டும் உரியதாகுக.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 1-3-1970 ல் பெரியபுராண விரிவுரைத் தொடரில் திருநகர் திரு. அ. ஞானசம்பந்த முதலியார் அவர்களால் "மெய்ப்பொருளும் சிறன்மிண்டரும்" என்ற தலைப்பில் அரிய விரிவுரை நிகழ்த்தப் பெற்றது.

ஆர்க்காட்டில் நம் சமாஜ சித்திரை மாதக் கூட்டமும் வழிபாடும் ஆர்க்காடு வார வழிபாட்டுக் கழகத்தின் சார்பில் 3-5-70 ஞாயிறன்று நிகழும். சமாஜ அன்பர்கள் யாவரும் வந்து கலந்து இன்புற வேண்டுகின்றோம்.

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் ளாடு.

மலர் 43	சாதாரண ஸு சித்திரை ஏப்ரல் 1970	இதழ் 4

அடர்த்து அருள்புரிந்த அடிகள்.

(ஆசிரியர்)

தேவாரங்களில் ஆங்காங்கு சுவையான பல கருத்துக்களும், சமயத் தத்துவக் கருத்துக்களும், வரலாற்றுச் செய்திகளும், இலக்கியச் சுவையும் பொருந்திய பாடல்கள் பல காணப்படுகின்றன. திருவலம்புரததில் அப்பர் சுவாமிகள் தாம் பாடிய திருத்தாண்டகம் முழுமையும் அகச்சுவை ததும்பப் பாடியிருக்கிறார். அப்பதிகத்துள் கடைசிப் பாடல் சுவையான கருத்துடையது. இராமாவதாரத்தில் திருமால் இராவணனை வென்றார். எப்படி வென்றார்? கையிலே கோதண்டம் ஏந்திச் சென்றார். தனியாகவா? சேனையோடு சென்றார். பரதகண்டத்தை விட்டு இலங்கைக்குள் நுழைய வேண்டுமே? அதற்காகச் சேதுவுக்கு அணையும் கட்டினார். இவ்வளவும் ஆகி, அங்குச் சென்றவுடனே இராவணனை வெல்ல முடிந்ததா? இல்லை. பல போர்கள் செய்ய நேர்ந்தது. கடைசியாக அவர் வென்றது, தம்மிடத்து விபீடனன அடைக்கலமாக வந்து புகுந்ததனால். பல நுட்பங்களைத் தெரிந்து கொண்டு, அவை மூலந்தான் இராவணனை வெல்ல முடிந்தது.

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடும்
சேதுபந் தனஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன்—

போரிட்டதிலிருந்த கடுமையையும் வீரத்தையும் பல குறிப்புக்களால் உணர்த்துகிறார். திருமாலுக்குச் செங்கண் இயல்பாகவே உண்டு என்பது இலக்கிய மரபு. இங்குச் செங்கண் என்பது சீற்றத்தை உணர்த்தி நிற்பது. 'சென்று புக்கு' என்ற வினைச் சொற்கள், போரினுடைய அருமையை எடுத்துக் காட்டுகின்றன. அதுமட்டுமன்று. 'பொங்கு போர பல செய்து' என்பது, இவ்வருமையை இன்னும் மிகுதிப்படுத்திக் காட்டுகிறது. இறுதியில் திருமாலுக்கு வெற்றி கிடைத்தது போர்த்திறமையினாலன்று. புகலினால்—புகலால் வென்றான் என்றார். விபீடணனுடைய அடைக்கலத்தால்தான் வெற்றி கிடைத்தது என்றார்.

இந்த அரிய வெற்றி ஒரு புறமிருக்கட்டும். இதையொத்த நிலைமையில் சிவபெருமான் என்ன செய்தார்? இராவணன் அவரை மதிக்காது கயிலையை எடுக்க முயன்ற போது, மலை அசைந்தது; சிவபெருமான் தமது வில்லாகிய பினாகத்தை நாடவில்லை; தமது திரிசூலத்தைத் தேடவில்லை. பின் என்ன செய்தார்? தமது கால் விரலை ஊன்றினார்; காலை ஊன்றவில்லை; ஒரு விரலைத்தான் ஊன்றினார், அதுவும் சிறிதளவுதான் ஊன்றினார். ஊன்றிய மாத்திரத்தில் அவன் தொலைந்தான். எப்படி? பத்துத் தலைகளிலுள்ள கிரீடங்கள் எல்லாம் பொடியாகி வீழ்ந்தன. வீழ்ந்த மாத்திரத்திலே, பெருமான் அவனை அழிக்கவில்லை; அருள் புரிந்தார். இதுதான் வேறுபாடு:

—நெடுமுடிகள் பொடியாய்வீழ
அங்கொருதம் திருவிரலால் இறையே யூன்றி
அடர்த்தவற்கே அருள்புரிந்த அடிகள்—இந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாடவீதி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே.

இங்கு, திருமால் மிக முயன்று இராவணனைக் கொன்றே விட்டார். ஆனால் சிவபெருமான் முயற்சியின்றிச் சிறு விரலால் அவனுடைய வலியழித்து, அருளும் புரிந்தார் என்று, இரண்டிலுமுள்ள முரண்பாட்டைச் சுவைபட எடுத்துக் காட்டுகிறார். அருள் புரிந்தது, அவனுக்கு ஆயுளும் வாளும் கொடுத்ததாகிய வரலாற்றைக் கருதிக் கூறியது.

வலியழித்தது ஆற்றல் மிக்க செயல். அருள் செய்தது கருணை மிக்க செயல். இவை முறையே அப்பனும் அம்மையுமாகிய தன்மையைக் காட்டுகின்றன. சமயக் கண்கொண்டு பார்க்கும்போது, இவ்வாறு சிவமும் சக்தியுமாகிய தன்மையை இங்கு உணரமுடிகிறது.

தொடக்கத்தில் இப்பதிகத்தை அகத்துறையில் பாடியிருக்கிறார் என்று குறிப்பிட்டோம். அககண்கொண்டு ஒரு தலைவியின் வாயிலாக இப்பாடலை நோக்கும்போது, ஆற்றலும் அன்பும் மிகுந்த ஒரு தலைவனிடத்து அவள் கொண்ட காதல் குறிப்பும் ஈங்குக் காணப்படுகிறது.

இப்பாடலில் அப்பர் சுவாமிகள் திருமாலையும் சிவபெருமானையும் ஒப்பிட்டுச் சொல்லும் கூற்றை உயர்வு தாழ்வு என்று கருதாமல், நகைச்சுவை பொருந்திய இலககியமாகப் பார்த்தால் இப்பாடலானது படிக்கப் படிக்கச் சிறந்த இன்பம் தருவதாக இருக்கும்.

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையோடும்
சேதுபந் தனஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதம் திருவிரலால் இறையே யூன்றி
யடர்த்தவர்க்கே அருள்புரிந்த அடிகள் இந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாடவீதி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

தாங்கள் அனுப்பவேண்டிய 1970—ஆம் ஆண்டு சமாஜ உறுப்பினர் கட்டணத்தை அனுப்பி விட்டீர்களா? இல்லையேல் உடன் அனுப்பிவைககுமாறு கேட்டுக் கொள்கிறோம். தற்போது பதிவுத்தபால் கட்டணம் உயர்ந்திருப்பதால் வி. பி பி யில் சித்தாந்தம் அனுப்பி வைப்பதானால் ரூ 1-25 அதிகமாகும். ஆகவே அந்நிலை ஏற்படாதவாறு அன்பர்கள் மணியார்டர் மூலம் உறுப்பினர் கட்டணத்தை அனுப்பி வைப்பது சாலச்சிறந்தது.

—செயலாளர்

உ
சிவமயம்

28—12—1969-ல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜ 64-ஆம் ஆண்டு விழா

இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை

திரு. பி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்

திருச்சிற்றம்பலம்

கருவார் கச்சித் – திருவே கம்பத்
தொருவா என்ன – மருவா வினையே.

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தச் செந்நெறி போற்றும் செல்வர்களே! செல்வியர்களே! இளைய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்தநன்றியும், வணக்கமும் உரியவாகின்றன.

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தினரும், கச்சியம்பதிப் பெருமக்களும் என்மீது வைத்த பேரன்பாலும், பழமை பாராட்டும் பண்பினாலும் மகிழ்ச்சிக்குரிய ஒரு பெரும்பேற்றை எனக்கு அளித்துள்ளார்கள். அஃதாவது, எனது வாழ்க்கைப் பணிக்கு முறைப்படி உரிய ஆண்டெல்லையைக் கடந்து நிற்கும் அளவிற்கு முதுமையுற்ற என்னை, இளைஞர் மாநாட்டிற்குத் தலைவனாக ஆக்கியிருப்பதேயாம். முதுமையில் இளமை கிடைக்குமாயின் அதனை எவரேனும் மகிழ்ச்சியோடு எதிர்கொள்ளாதிருப்பரோ! இரார். அதனால், நானும் இதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். இப்பணியை எனக்களித்த அனைவர்க்கும் எனது உளமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்ற முப்பது – முப்பத்திரண்டு ஆண்டுகட்கு முன்னர்-1937-ம் ஆண்டு என்று நினைவு - சமாஜ ஆண்டு விழா இக்கச்சியம்பதியில் நடைபெற்றது. அப்பொழுது

தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபைத் தலைவர். காலஞ் சென்ற பெரியார் திரு சிவகுருநாதப் பிள்ளையவர்கள் சைவர் மாநாட்டுத் தலைவர். திரு பூ. ஆலாலசுந்தரச் செட்டியார் அவர்கள் இளைஞர் மாநாட்டுத் தலைவர். மங்கையர் மாநாட்டுத் தலைவர் யாவர் என்பது நினைவில்லை. சமாஜக் குறிப்பில் இருக்கும். காலஞ்சென்ற பெருஞ்சொல்விளக்கனார், திரு அ. மு சரவண முதலியார் அவர்கள், நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள் முதலியோர் சைவர் மாநாட்டின் எழுச்சி வாய்ந்த சொற் பொழிவாளர்கள். இன்றும் நல்ல பேச்சாளராய்த் திகழ்கின்ற திரு. ச. சிவகுமாரன் அவர்கள் போன்ற பலர் அப்பொழுது இளைஞர் மாநாட்டில் சைவ சமய ஆக்கப் பணிகள் பற்றி இளமைத் துடிப்புடன் பேசிய பேச்சுக்கள் இன்றும் என் உள்ளத்தில் காட்சியளிக்கின்றன. அது பொழுது, நானும், இன்று இம்மாநாட்டை இங்கு நிகழ்த்துவதில் பெரும் பங்கு கொள்கின்ற என் நண்பர் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களும், மற்றும் இளைஞர்களாய்ச் சமய நூலை ஆய்தல், ஆய்ந்து பேசுதல், வாரவழிபாடு நிகழ்த்துதல் முதலியவற்றில் பேரூக்கம் உடையவர்களாய் இருந்தோம். சமாஜச் செயலர், காலஞ் சென்ற திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், திரு. வி. க. அவர்கள், இன்றும் சமயப்பணியிற் குன்றா ஊக்கமுடன் விளங்கும் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர் கள் முதலிய பெரியோர்கள் அன்று எங்களுக்கு அவ்வப் பொழுது பாராட்டுச்செய்து ஊக்குவித்து வந்தார்கள். இப்பழைய நினைவுகளெல்லாம், சமாஜ ஆண்டுவிழா மீண்டும் இக்கச்சியம் பதியில் நிகழுவதைபொட்டி என் உள்ளத்தில் எழுகின்றன. இவற்றால் உண்மையிலே இளமையைப் பெற்றது போன்ற ஒரு புத்துணர்ச்சியை நான் அடைகின்றேன். இவ்வுணர்ச்சியோடு, இத்துணைக் காலமாக நான் சைவ சமயத்தில் ஈடுபட்டிருந்த ஈடு பாட்டின் பயனாக எனக்குத் தோன்றிய சில கருத்துக்களை இளைஞர்களாகிய உங்கள் முன் வைக்கின்றேன். அவை களை நீங்கள் அமைதியுடன் எண்ணிப் பார்த்து, ஏற்கும் முறையால் கொள்க.

தனிப்பட்ட குடும்பங்களோ அல்லது பொதுநல அமைப்புக்களோ – ஏன்? நாடுகளேகூட, தாம் நின்று நிலவுவதற்கு இளைஞர் உலகத்தைத்தான் எதிர் பார்க்கின்றன. எனவே, சமயங்கள் நின்று நிலவுவதற்கும் இளைஞர்களே இன்றியமையாதவர்கள் என்பது சொல்லத் தேவை இல்லை. ஆயினும், பிற துறைகளில் இளைஞர் உலகநோக்கு நம்பிக்கையூட்டுவதாய் இருத்தல் போலச் சமயத்துறையில் இருக்கின்றதா என்பது ஆராய்தற்குரியது.

நமது சைவசமயம் இளம்பெருமக்களால் ஆக்கம் பெற்றதாகவே வரலாறு உள்ளது. சமயாசாரியர் நால்வருள் அப்பர் தவிர ஏனைய மூவரும் ஆண்டில் இளைஞரே. அறுபான்மும்மை நாயன்மார்களில் சிறப்புற்றவராகிய சண்டேசுர நாயனார், "பத்தி முதிர்ந்த பாலகனார்" எனப்போற்றப் பெறுகின்றார்.

அன்பின் மேல்எல்லைக்கண் நிற்கும் கண்ணப்பர் கன்னிவேட்டைக்குச் சென்ற கட்டிளைஞரே. திருமுறையைக் கண்டெடுத்து வகுத்துத்தந்த நம்பியாண்டார் நம்பிகள் பள்ளிச் சிறுவராயுள்ளபொழுதே பத்தி முதிர்ந்து விளங்கினார் என அறிகின்றோம். சந்தான குரவரில் தலைவராகிய மெய்கண்டார் ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்து, சித்தாந்தச் செஞ்ஞாயிறாய் விளங்கினார் என்று சொல்லப்படுகின்றது. இனனும் குமரகுருபரர், சிவஞானமுனிவரர், சிவப்பிரகாசர் முதலிய சைவப்பெரியார் பலரும் இளமையிலே முற்றத்துறந்த சிவநெறிச் செல்வர்கள் என்பது வெளிப்படை.

அடுத்துப் பார்க்குமிடத்து, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், நா. கதிரைவேற்பிள்ளை முதலியோர் இளமை முதலே சைவசமயத்திற்கென்று தங்களை ஒப்புவித்துக் கொண்டவராவர். இவ்வளவு தொலைவு செல்லவேண்டுவது ஏன்? நமது சமாஜம் இத்துணை ஆண்டு நின்று நிலவி அரும்பெரும் பணிகளைச் செய்துவருதற்கு இதன்கண் முன்னின்று உழைத்த - உழைக்கின்ற பெரியார் பலரும் இளமைப் பருவம் முதலாகவே சைவப்பணியில்

ஈடுபட்ட பெருமக்கள் என்பது வெளிப்படை. இந்நிலையைப் பெற்றுள்ள சைவசமயத்தில் இளைஞர் உலகம் இன்று எவ்வாறுள்ளது? முன்னிருந்த அளவில் குறையாமலாயினும் நின்று எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையைத் தருகின்றதா என்று பார்க்கவேண்டும்.

இங்குக் கூடியிருக்கும் உங்களில் பலரை நான் நன்கறியமாட்டேன் அதனால், உங்களுடைய அன்றாடப் பழக்க வழக்கங்களையும் நான் அறிந்திலேன். ஆயினும், பல்லாண்டுகளாக நான் ஆசிரியப்பணி செய்து வருபவன் என்ற முறையில், இக்கால இளைஞரது போக்கினை ஒருவாறு உணர்ந்தவன் என்று என்னைச் சொல்லிக்கொள்வேன். அவ்வகையில் நான் காண்பன சில.

பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ பயிலும் மாணவர் நிலையில் இருப்பவர்களோ, படிப்பை முடித்து நல்ல சில அலுவல்களில் இருப்பவர்களோ இன்று திருநீறு அணிவதிலும், சமயக் கூட்டங்கட்கும், கோயில்கட்கும் செல்வதிலும் கூசுதல் உடையவராய் இருத்தலும், அவ்வாறே சமய நூல்களைப் படிப்பது, ஆராய்வது என்பவற்றில் விருப்பமில்லாதவராய் இருத்தலும் காணப்படுகின்றன. இந்நிலை இந்து சமயத்தில் - சிறப்பாகச் சைவ சமயத்தில்தான் உள்ளது.

சைவக் குடும்பத்தில் பிறந்த சைவ இளைஞர்களில் இன்று எத்துணைப்பேர் சைவ அனுட்டானங்களை உடையவராய் இருக்கின்றனர்? எத்துணைப்பேர் கோயிலுக்குச் சென்றோ வீட்டில் இருந்தோ இறைவனை வழிபடும் நியமம் உடையவராய் இருக்கின்றனர்? எத்துணைப்பேருக்குச் சைவசமயப் பெரியார்களது வரலாறுகளும், சைவசமய மரபுகள், கொள்கைகள் முதலியனவும் தெரியும்? சாத்திரவன்மை உடைய சைவ இளைஞர் இன்று இருக்கின்றார்களா, அல்லது உருவாகியேனும் வருகின்றார்களா, உருவாவதில் ஆர்வமேனும் உடையவர்களாய் இருக்கின்றார்களா என்பது பெரிதும் ஐயத்திற்கு இடமாகவே உள்ளது. இந்நிலை சைவசமயத்தின் எதிர்கால நிலைபற்றி நம்பிக்கை தருவதாய் இல்லை.

ஒரு தலைமுறைக்கு உட்பட்ட சில்லாண்டுகளுக்குள் இந்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் யாது? காலப் போக்கும், சூழ்நிலைகளும் காரணம் என்று எளிதில் விடை கூறிவிடலாம். அவையெல்லாம் ஓரளவு காரண மாய் இருக்கலாம். ஆயினும், அவைகளையே சொல்லித் தட்டிக கழித்துவிட முடியாது. எல்லாத் துறைகளும் காலத்திற்கு ஏற்ப நிலைபெற்று வரும் பொழுது, உண்மை யையே உயிர்நாடியாகக் கொண்ட சமயம்மட்டும் காலச் சூழ்நிலையால் நிலையின்றி நீங்குதல் எவ்வாறு? ஆகவே, இத்துறையில் அடிநிலையான குறை ஏதோ இருத்தல் வேணடும். எனக்குச் சில கருத்துக்கள் தோன்றுகின்றன. நீங்களும் எண்ணிப் பாருங்கள்; மற்றவர்களும் எண்ணிப்பார்க்கட்டும்.

ஒவ்வொரு சைவர் வீட்டிலும் சிறிய அளவிலாவது சைவ அனுட்டானம், வழிபாடு, திருமுறைப் பாராயணம், நாயனமார்களது சிறப்புநாட் கொண்டாட்டம், குறிப் பிட்ட காலங்களிலாவது கோயிலுக்குச் செல்லும் நியமம் முதலிய சூழ்நிலைகள் அமைந்திருத்தல் வேண்டும். முதியோர்களே இவற்றில் முதறபங்கு பற்றுபவர்களாய் இருத்தல் வேண்டும். அதனோடு தங்கள் சந்ததியினர்க்கு இளமையிலேயே இத்தகைய செயல்களை நியமங்களாக ஆக்கி, இயன்ற அளவில் இயற்றிவரச் செய்தல் வேண்டும். ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் இருப்பினும் செய்ய மனம் செல்லாததற்கும், செய்ய லாகாது என்று நினைப்பினும் விடமுடியாமல் போவதற்கும் பழக்கம் இன்மையும், பழக்கம் உடைமையுமே முதன்மை யான காரணம். எனவே, பெற்றோரும், மற்றோரும் தங்கள் இளந்தலைமுறையினருக்கு இததகைய சமயப் பழக்கத்தை இளமையிலே உண்டாக்குதலைத் தங்கள் தலையாய கடமையாகக் கொள்ளல் வேண்டும். சமய ஒழுக்கம் அன்றாடப் பழக்கமாகிவிட்டால், பின்னர் அது பற்றி யார் எது சொன்னாலும், எது செய்தாலும் அஃது எளிதில் நீங்கிவிடாது. இத்தகைய சூழ்நிலையையும், பழககத்தையும் உணடாக்கும் நிலைமை, சைவர் வீடு களிலேயே குறைந்துள்ளது என்றே நான் கருதுகின் றேன்.

இளமையிலே இத்தகைய பழக்கத்தை ஏற்படுத்துவதோடு, வயது செல்லச் செல்ல மற்றைய கல்விபோலச் சமயக் கல்வியை மக்கட்கு ஊட்டுவதையும் பெற்றோரும், மற்றோரும் குறிக்கொண்டு செய்தல் வேண்டும். மற்றைய கல்விகள் இஞ்ஞான்று இளைஞர்கட்கு எப்படியோ ஓரளவேனும் கிடைத்து விடுகின்றது. ஆனால், சமயக் கல்வி அவர்கட்குக் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லாததுடன், அதற்கு எதிரான கருத்துக் களைத் தருகின்ற சூழ்நிலைகளும் மிக உள்ளன. ஆகவே, சமயக் கல்வியை மக்கட்குப் புகட்டுவதில் முதியோர்கள் சோர்வுற்றிருத்தல் கூடாது.

> "ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
> சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்றதில், 'சான்றோனாக்குதல்' என்பதைத் தம்மக்கட்கு உலகியற் கல்வியை ஓரளவு கற்பித்துவிடும் அளவிற்கே இஞ்ஞான்று தந்தைமார்கள் கடனாகக்கொண்டு விடுகின்றார்கள். அதுதான் இளைஞரிடையே சமயப் பற்றுக் கிளர்ந்தெழாமைக்குக் காரணமாய் இருக்குமோ என்று நான் எண்ணுகின்றேன், இளமையிலே சமய ஒழுக்கத்தில், ஈடுபடுத்தி, வயது மிக மிக ஏனைக் கல்வியோடு சமயக் கல்வியும் குறையறப் பெறச் செய்தால், முன்னைப் பழக்கம் பின்னும் வலுப்பெற்று ஓங்கி நிலைபெற்றுப் பயன் தரும் என்பதில் ஐயமில்லை ஆனால், இம்முறை இன்று எங்கும் மிக மிகக் குறைவாகவே உள்ளது என்று சொல்லலாம்.

முதியோர் கடமை இதுவாயினும், இளைஞரும் அவர்க்குக் கீழ்ப்படிந்து அவர்வழி நிற்றல் இன்றியமையாதது. முதியோரினும் தம்மை அறிவு முதிர்ந்தவர் களாக எண்ணி, முதியோர் சொற்களுக்குப் போதிய மதிப்புத் தாராது செல்லும் போக்கு என்றும் உள்ள ஒன்றாயினும், இக்காலத்தில் இது சற்று மிகுதியாய்க் காணப் படுகின்றது. "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்று கூறிய ஔவையார் வாக்கியம், இன்று பொருள் உடையதாகவே கருதப்படவில்லை. இதற்குக் காரணம், முதியோர் கற்ற கல்வியிலும், அவர்களுக்கு உள்ள

உலக அனுபவத்திலும் தாங்கள் கற்கும் கல்வியும், காணும் உலக அனுபவமும் அளவிலும், தரத்திலும் உயர்ந்தனவாக மதித்துக்கொள்ளும் ஒரு மனப்பான்மை யேயாகும். இது வருந்தத் தக்கதொரு போக்கு. தோற்றத்திலேயே களையவேண்டிய ஒரு போக்கு. சமயத்துறையில் இஃது இன்னும் சிறிது மேலோங்கிக் காணப்படுகின்றது.

கல்வியின் தரம், அறிவின் தரம் எவ்வாறு இருப் பினும் அனுபவத்திற்கு ஒரு தனிப்பயன் உண்டு என்பதை மக்கள் அறிந்துகொள்ளல் வேண்டும். 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது' என்பது ஒரு பழமொழி. ஏட்டில் சிலவற்றைப் படித்துவிட்டு, அவற்றை அப்படியே உலகத்தில் கண்டுவிடலாம் என்று நினைத்தால், அது வெறும் பகற்கனவேயாய் முடியும். அதனால்தான், சில பணித்துறைகளில் அதுபற்றிய கல்வியைக் கற்று முடித்து விட்டாலும், தனியாக அப்பணியில் இறங்க வொட்டாது, அப்பணியில் தேர்ந்துள்ள ஒருவர்கீழ் இருந்து சிலகாலம் பயிற்சி பெற வேண்டும் என்று வைத்திருக்கின்றார்கள். எனவே, அனுபவம் என்பது ஒரு தனிப்பெருஞ் செல்வம் என்பதையும், அது வயது முயற்சியால் வருவதன்றி இளமையிலே வந்துவிடுவதன்று என்பதையும் அறி வுடைய இளைஞர் நன்குணர்ந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு உணராது, தங்களைத் தாங்களே பேரறிவும், பேரனுபவமும் உடையவர்களாக மதித்துக்கொண்டு நடக்கத்துணிவார்களானல், அது, தாய்க்கு மகன் மகப் பேறு பார்க்கச் சென்ற கதையாய் முடியும்.

மூவாட்டைப் பிராயத்திலே அம்மையின் அருட்பாலை உண்டு நாவில் தனிச்சிவஞான சம்பந்தரான ஆளுடைய பிள்ளையார்கூடத் தம் தாய் தந்தையரது சொல்லுக்கு மாறு சொல்லியதாகவோ, மாருக நடந்ததாகவோ வரலாறு இல்லை. ஞானத் தவமுனிவராகிய அப்பர் வார்த்தைக்காயினும் ஞானசம்பந்தர் மாறு சொன்னதாக வரலாறு இருக்கின்றது; ஆனல் தம் தந்தையார் சொல்லுக்கு அவர் மாறு சொல்லியதாக வரலாறு இல்லை. உபநயனம், திருமணம் என்பன ஞானசம்பந்தரது

நிலைக்குச் சிறிதும் ஏலாச் செய்கைகள். ஆயினும் அவற்றைத் தாய் தந்தையரது விருப்பத்திற்கு ஏற்கவே அவர் ஏற்றுக்கொண்டார் எனக் கருதவேண்டியுள்ளது என்ன இருப்பினும், ஞானசம்பந்தருக்கிருந்த உயர் ஞானம் அவர்தம் தந்தையாருக்கு இருந்ததென்று சொல்ல இயலாது. அதனால் அவர் தம் மகனார்க்கு உபநயனப் பேற்றையும், திருமணப் பேற்றையும் பெறுவிப்பதில் பேரார்வம் உடைவராய் இருந்திருத்தல் இயல்பே. ஆயினும், அவற்றை ஞானசம்பந்தர் ஏற்றுக்கொண்டது தான் வியப்பாகின்றது. உபநயனச் சடங்கினால் ஞான சம்டந்தருக்கு எய்தும் குற்றம் ஒன்றும் இல்லை. அதனால், அதனை அவர் எளிதில் ஏற்றுக்கொண்டதாகத் தெரி கின்றது. ஆயினும், திருமணத்திற்கு அவர் எளிதில் உடன்படாமல் மறுத்தமை காணப்படுகின்றது. அவ் விடத்திலும் சேக்கிழார், திருமணம் பற்றிச் சிவபாத இருதயர் நேரே ஞானசம்பந்தரிடம் சொல்ல அவர் மறுத்த தாகச் சொல்லவில்லை. உறவினரும், பிறருமாகிய வேறு பலர் ஞானசம்பந்தரிடம் அதனைக் கூறியதாகவே சொல்லுகின்றார். ஆயினும், ஞானசம்பந்தர் உடன்பட்ட பின்பு, 'தந்தையரும தாங்கரிய பெருவாழ்வு பெற்றார் போல் களிப்பெய்தினர்' எனக் கூறுகின்றார். இவற்று லெல்லாம், மூத்தோர்க்கு அடங்கி நடத்தல் அறிவுடை மக்கட்கு எத்துணை இன்றியமையாததாய் உள்ளது என்பது விளங்கும்.

சமயம் வளர்ச்சியடையாததற்குக்கூட, அத்துறையில் மூத்தோராய் உள்ளவர்களது சொல்லுக்கு மக்கள் போதிய மதிப்புத் தாராமையேயாகும். பிற பிற துறை களில் தலைவர்களாய் உள்ளவர்கள் எவையேனும் சில வற்றைச் சொல்லிவிட்டால், அவைகளை ஆராய்ச்சி சிறிதும் இன்றி அப்படியே வேதவாக்கியமாகக் கொண்டு நடைமுறையில் பின்பற்றத் துடிக்கும் போக்கும், சமயத் துறையில், அருள்பெற்ற நிறைமொழி மாந்தரது அருட் டிருமொழிகளாயினும் அவற்றைப் பற்றி ஐயமும், ஆராய்ச்சியும் கொண்டு பின்பற்றத்தயங்கும் போக்கும் காணப்படுதலை யாவரும் அறிவர். இதுதான் இன்று சமயம் தழைத்தோங்காமைக்குக் காரணமாய் உள்ளது.

இப்போக்கினைச் சைவ இளைஞர்கள் கைவிட வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

ஐயமும், ஆராய்ச்சியும் இளைஞர்களுக்கு வேண்டா என்று நான் சொல்லவில்லை. ஆயினும், தங்கள் புத்தம் புதிய உள்ளங்களில் புதியனவாகத் தோன்றுகின்ற ஐயங்களையே முடிந்த முடிபாக வைத்துக் கொண்டு, சமய உண்மைகளை கைவிட்டுவிடுதல் கூடாது என்று மட்டுமே சொல்ல விரும்புகிறேன். எனவே, சமய ஒழுக்கங்களை முன்னோர் வழிப்படியே பற்றி நின்று, அவை பற்றி ஐயம் தோன்றுமாயின், அவைகளைத் தக்க நூல்கள் வாயிலாகவும், கேள்வி வாயிலாகவும் நீக்கிக் கொள்வதில் இளைஞர்கள் ஊக்கம் உடையவர்களாதல் வேண்டும். அதற்கு ஏனைக் கல்வி கேள்விகளுடன் சமய நூற் கல்வியும், கேள்வியும் இன்றியமையாதன என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. இக்கல்வி கேள்விகளில் இளைஞர்கள் ஊக்கங் காட்டுவார்களானால், அவற்றிற்கு ஆவன வற்றைப் புரிவதில் முதியவரும் சோர்வின்றி முயலுவர். நமது சமாஜம் போன்ற பெரிய அமைப்புக்களும், பிற சிறிய அமைப்புக்களும் அவர்கள் முயற்சிக்கு உறுதுணையாய் அமையும்.

'சமயநூல்' என்றால், சைவத் திருமுறை, சாத்திரம், புராணம், இதிகாசம் என்பன மட்டுமல்ல; திருவள்ளுவரது திருக்குறள், ஔவையாரது மூதுரை, நல்வழி போன்ற அறநூல்களும், இன்னும் புறப்பாட்டு, அகப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களுங்கூடத்தான் சமய நூல்கள். அவைகள் சமய உண்மைகளை மறைமுகமாகக் கூறுவன. ஆதலின், அவ்வுண்மைகள் புலனாகுமாறு அவற்றைக் கற்பித்தலும், கேட்பித்தலும் வேண்டும்.

நமது சமயத்தில் அறநெறியும், பொதுநல நோக்கும் இல்லை என்பதாக நினைக்கும் நினைப்பு ஒன்று பலரிடையே இருத்தலை அறிகின்றோம். இது மிகவும் தவறுடைய தொன்று. நம் சமயத்தில் இளைஞர்களுக்குப் பற்று வளராமல் போவதற்கு இந்நினைப்பும் ஒரு காரணம். இந்நிலை, மேற்கூறிய பொது நூல்களைச் சமயநோக்கில்

எடுத்துக் கூறும் முறையால் நீங்குவதாகும். இவற்றின் பொருட்டு இலக்கியம், திருமுறை, சாத்திரம் முதலியவற்றைத் தக்கவகையில் கற்பிக்கும் பாட வகுப்புக்களும், சொற்பொழிவு அவை, கருத்தரங்கு முதலிய நூலரங்குகளும் அவ்வப்பொழுது ஆங்காங்கு நிகழச் செய்தல் வேண்டும். இத்தகைய அறிவுத் துறைகளேயன்றிச் செயல் துறையில் வாரவழிபாடு, தல யாத்திரை முதலியனவும் நடைபெறல் வேண்டும். இவற்றிலெல்லாம் முதியோர்கள் இளைஞர்களுக்குப் பெரும் பங்கு வழங்குதல் வேண்டும்; இளைஞர்களும் அவற்றை மகிழ்ச்சியோடு ஏற்று ஊக்கத்துடன் செயலாற்ற வேண்டும்.

சமயத்துறையில் இளைஞர்கள் தங்களுக்கு உள்ள ஐயங்களைக் கேட்டுத் தீர்த்துக்கொள்ளுதற்கு இந் நூலரங்குகளில் முதியோர்கள் நல்ல வாய்ப்புத் தந்து அவர்களுக்கு மனநிறைவைத் தருதல் வேண்டும். முதியோர்களும் கருத்தரங்குகள் நடத்திக் காலத்திற்கேற்பச் செய்ய வேண்டுவனவற்றைத் தெரிந்து, சமய உண்மைகளையும், சமய ஒழுக்கங்களையும் இளந்தலைமுறையினர் ஆர்வத்தோடு பின்பற்றி ஒழுகுவதற்கு ஏற்றமுறையில் வழிவகுத்தல் வேண்டும். இவையெல்லாம் ஓரளவிலேனும் நடைபெறுமானால், நமது சமயம் எதிர்காலத்தில் ஓரளவேனும் நின்று நிலவி அனைவர்க்கும் பயன் தருவதாய் அமையும் என்று எதிர்பார்க்கலாம். இவற்றிற்கெல்லாம் நமது சமாஜமும், பிற சைவ அமைப்புகளும் ஆவன செய்யும் என்று நம்புவோம்.

இவ்வாறு நாம் எண்ணும் எண்ணங்களும், செய்யும் முயற்சிகளும் இனிது நிறைவேறவும், சிறப்பாக இளைஞர் உள்ளங்கள் யாவும் செந்நெறி பற்றிச் சிறப்பெய்தவும் திருவருள் புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டி அமைகின்றேன். இவ்வரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய அனைவர்க்கும், இதுகாறும் இருந்து கேட்ட யாவர்க்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். வணக்கம்.

திருவைகா

மு. அ.

இடம்: கும்பகோணத்துக்குச் சிறிது வடமேற்காக இன்னம்பர், புறம்பயம் வழியாகச் செல்லும் கப்பிச்சாலையின் புறம்பயமடைந்து மூன்று மைல் சென்றால் கொள்ளிடத்தின் தென் கரையில் கோயிலை அடையலாம்.

பெயர்: வைகா, வைகாவூர் என்று பெயர் வழங்கும். வில்வவனம் என்ற பெயரும் உடையது. சுவாமி பெயர் வில்வவனேசுரர். அம்பிகை வளைக்கை நாயகி, சர்வஜன ரட்சகி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் யமதீர்த்தம். பூதேவி பூசித்தமையால் பூபுரம்.

கோயில்: கிழக்கு பார்த்த சந்நிதி. வெளியிலும் உட்புறத்திலும் மொட்டைக் கோபுரம். இரண்டு பெரிய மதில்கள் உள்ளன. உள்மதில் மிகவும் பெரியது; நல்ல நிலையில் உள்ளது. வெளி மதில் பழையது. கோபுர வாயிலில் தலவரலாறாகிய வேடன் வரலாறு சிற்பமாக உள்ளது. கோயிலுக்கு எதிரில் யம தீர்த்தமும் இடப்புறத்தில் ஞானசம்பந்தர் கோயிலும் உள்ளன. அங்கு மூவரும் உள்ளனர். அம்பாள் கோயில் வடபுறத்தில் தனியாகக் கிழக்கு நோக்கி உள்ளது.

மூர்த்தி: மொட்டைக் கோபுரத்தில் விநாயகரும் வடபுறத்தில் நடராசர் வடிவமும் உள்ளன. சிவராத்திரி நாலாம் காலத்தில் சிவபெருமான் பரிவார தேவதைகளோடு வேடனுக்குக் காட்சி கொடுத்த சிற்பம் உள்ளது. விநாயகருடைய மூஞ்சூறு பிரசாதம் கொண்டுள்ளது; படையெடுத்து வந்த யமனோடு போரிட்டு விரட்டுவதற்காக எல்லா நந்திகளும் யமன் வரும் திசையாகிய கிழக்குத் திசையில் திரும்பியிருக்கிறார்கள். தென்கோஷ்டத்தில் நர்த்தன கணபதி, அகத்தியர், தக்ஷிணாமூர்த்தி இரண்டு வடிவங்கள், பிட்சாடனர். தக்ஷிணாமூர்த்தி மிதித்த முயலகன் கிழக்குப் பக்கம் இருக்கிறது. புதிய வடிவம் பழையதைவிட மிகப்

பெரியது. கோஷ்ட தக்ஷிணாமூர்த்தி மிகப் பழைய வடிவ;ம் கையில் தண்டுள்ளது. தக்ஷிணாமூர்த்திக்கு எதிரில் வடக்கில் சப்த கன்னிகைகளுக்குத் தனிக் கோயில் உள்ளது. பின்கோட்டத்தில் லிங்கோத்பவர் இருக்கிறார். நிருதி விநாயகர் கோயில் வெளிமண்டபத்துக்கு அருகில் இருக்கிறது. ஆறுமுகப்பெருமான் மிகப் பெரிய வடிவத்துடன் மயில்மீது அமர்ந்துள்ளார். இது அழகிய வடிவம். வடபுறம் கோட்டங்களில் பிரமன், அர்த்தநாரீஸ்வரர், மகிழத்தின்மீது அட்டபுஜ துர்க்கை இருக்கின்றனர். சண்டேசர் பழையவர், புதியவர் ஆக இருவர் உள்ளனர். மூலவர் சுயம்பு மூர்த்தி அபிஷேகம் செய்வதில்லை. துவாரபாலகர்களுக்குப் பதில் பிர்மவிஷ்ணுக்கள் உள்ளனர். முன்புறத்தில் மாகாளி, வைணவி, பைரவர் வடிவங்கள் 4, சந்திரன் சூரியன் ஆகிய இருவர், சனி உருவங்கள் உள்ளன.

உற்சவ மூர்த்திகள் அனைவரும் உள்ளனர். நடராச வடிவம் மிகவும் சிறப்பானது. $3\frac{1}{2}$ அடி உயரத்துடன் சடையோடு கூடியது.

வரலாறு: இந்தத் தலத்தில் சிவராத்திரி மிக்க விசேஷமானது. சிவராத்திரியன்று மான் வேட்டையாடி வந்த ஒரு வேடன் மானைத் துரத்திவர அம்மானினுடைய துன்பத்தைக் கண்டு இரங்கிய வில்வவனேசர் ஒரு புலி வடிவம் எடுத்து எதிரில் வர வேடன் அஞ்சி ஓடி, கோயிலில் இருந்த வில்வ மரத்தில் ஏறிக்கொண்டான். புலி வடிவாக வந்த பெருமான் மரத்தின் அடியில் இரவு முழுவதும் இருந்தார். மரத்தில் ஏறிய வேடன் தழைகளைக் கொய்து கீழே போட வில்வப் பத்திரங்கள் கீழே புலி வடிவாயிருந்த பெருமான்மீது விழுந்தன. பொழுது விடியும் நேரம் அவனுடைய ஆயுள் முடிந்தமையால் அப்போது உயிரைக் கவரவந்த யமனை சிவபெருமான் ஆணையால் நந்தியம் பெருமான் வெருட்டி ஓட்டி விட்டார். இங்கு நந்தி யம தீர்த்தம் உண்டாக்கி இறைவனைப் பூஜித்து வழிபட்டு அவர் கருணைக்குப் பாத்திரமானான். அன்று சிவராத்திரியா

யிருந்தபடியினாலும் வேடன் பகல் உண்ணாது இரவு உறங்காது இரவு வில்வ அர்ச்சனை செய்ததைப் பெருமான் அறியாமற் செய்த பூசையாக ஏற்றுக்கொண்டு அவனுக்கு முக்தி அளித்தார். யமனைத் தாக்க பெருமான் தெட்சிணாமூர்த்தி வடிவில் கையில் தண்டேந்திப் புறப்பட்டமையால் இங்கு மூர்த்தி கையில் தண்டு யேந்தி யிருக்கிறார். சப்த கன்னிகைகள் பாபவிமோசனத்துக்காக இம்மூர்த்தியை வழிபட்டார்கள். அக்கோலம் இவர் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. உமாதேவி இங்கு மழையில்லாத சமயம் மழை பெய்வித்துப் பயிர் வளர்த்ததால் எல்லாம் வளர்க்கிற வல்லவள் என்ற பெயர் அம்பிகைக்கு உண்டு.

பாடல்: சம்பந்தர் பாடல் ஒரு பதிகம். இதிலுள்ள இரண்டு பாடல்கள் மிகவும் சிறப்பானவை.

கோழைமிடறாக கவிகோளுமிலவாக இசைகூடும்
வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழு
மீசனிடமாந்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை
தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும்
வைகாவிலே.

இன்னவுரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது
நீதிபலவும்
தன்னவுரு வாமென மிகுத்த தவநீதியொடு
தான்அமர்விட
முன்னைவினை போம் வகையினால் முழுதுணர்ந்து
முயல்கின்ற முனிவர்
மன்னஇரு போதும் மருவித்தொழுது சேரும்
வயல்வைகாவிலே.

தலபுராணம், கவித்தலம் வேலைய தேசிகர் பாடியிருக்கிறார். பாடல் 386.

கல்வெட்டு: சோழரின் பிற்காலத்தில் இந்நாட்டரசராயிருந்த இராச நாராயணச் சம்புவராயரின் கல்வெட்டு.

சிறப்பு: சிவராத்திரி தரிசனம் விசேடம். தக்ஷிணாமூர்த்தி தண்டேந்தியிருப்பதும், நந்தி திரும்பிக் கிழக்கு நோக்கியிருப்பதும், நடராசமூர்த்தி வடிவமும் சிறப்புடையவை.

மாசறுகாட்சி

(மா. ப. தியாகராஜன் B. A)

நாம் காண்பது காரிய உலகம். இதற்குக் காரண உலகம் ஒன்றிருத்தல் வேண்டும். காரணமின்றி ஒரு காரியம் நிகழாதன்றோ? காரண உலகம் கட்புலனுக்குத் தோன்றாதது; எனினும் யுக்தியினால் அநுமானிக்கப்படுவ தொன்றாகும். ஒரு வீட்டைப் பார்க்கிறோம். அது ஒருவனுடைய உள்ளத்தில் உருவாகி ஏட்டில் எழுதப்பட்டு சிலர் அப்படத்தைக் கண்டு ஆமோதிக்கக் கட்டப்பட்டதேயன்றி தானாகத் தோன்றியதன்று. எனவே காரியத்திற்கொரு காரணமும் காரணத்திற்கொரு கர்த்தாவும் இருத்தல் வேண்டும். நினைப்பவன் கர்த்தா, நினைவு காரணம், நினைத்தது காரியமாகும். சிலர் காரணத்தைப் புறக்கணித்து, காரியத்தையே பிரதானமாகக் கொண்டு பேசுவர். அவர்களே உலகாயதர் அல்லது நாத்திகர் என்பர். சிலர் காரிய உலகம் மித்தை வெறும் தோற்றமென்று புறக்கணித்து காரண உலகத்தை உண்மையென வாதிப்பர். அவர்கள் அத்வைத வாதிகளாவர். இவ்விரண்டையும உண்மையென ஒப்புக்கொண்டு இவற்றின் கர்த்தா சிவன் எனும் கொள்கையுடையவர்கள் சைவ சித்தாந்திகள். இவற்றையே பதி பசு பாசம் என்ற முப்பொருளாகச் சித்தாந்தம் பேசும்.

காரிய உலகக் காட்சியை மாசற்ற காட்சியென்றும், கர்த்தாவைக்காணும் காட்சியை மாசறு காட்சி யென்றும் கொள்ளல் வேண்டும். முதல்கண் கூறிய காட்சி துன்பத்தைத் தருவதால் மாசற்ற காட்சி எனப்படும்

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

—என்பது திருவள்ளுவர் வாக்கு. கர்த்தாவைக் காணும் காட்சி இன்பம் பயப்பதாகும். அறியாமையெனும் மயக்கத்

தையும் போக்கும். அபிராமிபட்டர் அமாவாசை இருட்டி லும் அபிராமி அம்மையின் ஒளிமயமான உருவத்தைக் கண்டு கொண்டிருந்ததால் அன்று பௌர்ணமி திதியென்று அரசனிடம் கூறினர் என்பது அவருடைய வரலாறு. அவர் அவ்வனுபவத்தை அபிராமி அந்தாதியில் பின்வரு மாறு பாடுகிறார்

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தஅம்மே!
அளியேன் அறிவள விற்கள வானது அதிசயமே.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் அடியவர்களுடைய தெளிவான சிந்தையில் அவன் வானுமாய் குடிகொண்டிருப் பவன்; தேனுமாய் இன்னமுதமுமாய் இருப்பவன் என்று பாடியருளியுள்ளார்.

தேனுமாய் அமுதாகி நின்றான் தெளிசிந்தையுள்
வானுமாய் மதிசூட வல்லான் மங்களக்குடிக்
கோனைநாடொறும் ஏத்திக் குணங்கொடு கூறுவார்
ஊனமானவை போயறும் உய்யும் வகையதே

அவ்வெளிய உருவத்தானை வானுமாய் சிந்தையில் காண் பவர்களுக்கே ஊனமானவை, அதாவது இந்த உடம்பின் வாழ்க்கை போயறும். அப்படிப்பட்டவர்களே பவக்கடலை வெல்ல முடியும் என்று பரஞ்சோதி முனிவரும் பின் வரும் பாடலில் கூறியருளியுள்ளார்.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்கம்
முதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாயிருந்ததனை இருந்தபடி
இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்
தொடக்கைவெல்வாம்

வினையாமல் வினைத்தல் மறதியின்றிச் சதாவினைத்தல் என்ப தாகும். "நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுவது போன்றும் "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" யென்று கூறுவது போன்றும் இருக்கும் நிலையே வினையாமல் வினைக்கும் நிலை யாகும்.

மாயாமலங்கொண்ட மக்கள், நினைப்பு மறப்பு எனும் சகல கேவல நிலையிலிருப்பவர்களாதலால் அவன் எளியவ னுய்ச் சிற்றறிவிற்கு அளவாகிய ஒரு திருமேனியுடன் பல மூர்த்தங்களாக அவர்களுக்குக் காட்சியளிக்கிறான். நம் சிற் றறிவு காணும் காட்சி பவத்தொடக்கை அறுக்கமாட்டாது. இதைத்தான் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள்,

"ஓதியாருமறிவாரில்லை யோதி உலகெலாம்
சோதியாய் நிறைந்தான் சுடர் சோதியுட்சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணோடெரி காற்றுமாய்
ஆதியாகி நின்றானும் ஐயாறுடை ஐயனே

அப்படி வெளிமுதற் பூதங்களாகி விரிந்த ஆதி முதல்வனை ஓதிப் பாடிப் பரவுதலினால் மட்டும் அறிய முடியாது. அவன் தன் சிற்றம்பல இருப்பை, வெளியாய உருவத்தில் இருந்து காட்ட நமக்கு அதைக் காணும் ஆற்றல்மிக, நினைப்பற நினைக்கும் தன்மை யேற்பட வேண்டும். அந்தத் தன் மையை எய்தியவர்கள் யாரெனில் "நான்மறையாறங்கமுதல் கற்ற கேள்வி வல்லார்கள் ஆகிய" சனகாதி முனிவர்கள்.

"கண்ணொடு கண்ணிணை நோக்கின் வாய்ச்சொல் என்ன பயக்கும்." அதுபோல கருத்தோடு கருத்தொன்றுபடில் வாய்ச்சொல் எதற்கு? எனவே அவர் சொல்லாமற் சொல் லினார் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு காதலன் தன் நோக்கைப் பருவமடையாத நங்கையின்பால் காட்டினால் அவள் அவனுடைய எண்ணத்தைப் புரிந்துகொள்ள முடியுமா? அதுபோல சிவபெருமான் தன் நீலமாய

அகன்ட உருவத்தை அப்படி இருந்து காட்டினாலும், பக்குவ மெய்திய இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் ஆகிய இவை கைவரப்பெற்ற சுத்த ஆன்மாக்களே அக்காட்சியைக் காணவல்லவர்களாவர். அதுவே பவக் கடலை வெல்லக்கூடிய மாசறு காட்சியுமாகும். ஆலயவழிபாடு, மானத வழிபாடு, யாத்திரை வழிபாடு இவையாவும் அக்காட்சியைக் காண நம்மைப் பக்குவப்படுத்தும் சாதனைகளாகும். வழிபாட்டில் நமது குறிக்கோளும் அதுவாக இருத்தல் வேண்டும்.

<u>சமயப் பகுதி.</u>

பாம்பன் கண்ட சேந்தன்

(வித்துவான் அம்பை சங்கரனார்)

இத்தமிழுலகில் வாழும் மக்கள் யாவரும் சிவபெருமானையே முழுமுதற் கடவுள் எனக் கருதுவர். விநாயகர், முருகன் போன்ற தெய்வங்களைப் பாமர மக்கள் எவ்வாறு தம்முள் முறை கொண்டாடுகின்றனரோ அதுபோன்று அச்சிவபிரானார்க்கு முறைகூறி வாழ்த்தி வணங்குதல் மரபு. பொதுவாக இந்நிலையிலிருந்தாலும் சில சிறப்புடைப் பெரியோர்கள் தெய்வங்களுள் வேறுபாடு கற்பித்தல் கூடாது என்றும் எத்தெய்வத்தை வழிபட்டாலும் அது சிவபெருமானை வழிபட்ட பெருமையையே ஒக்கும் என்றும் கருதுவர்.

> "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
> மாதொரு பாக னார்தாம் வருவர்"

என்பது நம் சைவ சித்தாந்த சாத்திர முடிபு.

இவ்வாறு பொதுவாக நம் சாத்திரங்கள் கூறினும் அக்கருத்தை வலியுறுத்திக் கூறிப்போந்தவர் நம் பாம்பனடிகளாவர். அவ்வடிகளார் முருகனும் சிவனும் ஒன்றே அவ்விருவருள் வேறுபாடு கற்பித்தல் ஒண்ணாது என்பதை மனத்துட்கொண்டு தாம் இயற்றிய நூல்கள் யாவற்றிலும் அக்கருத்தை வலியுறுத்திப் போந்தார்கள். அதற்கு

அவர்கள் வேதம், ஆகமம், உபநிடதம் முதலிய எல்லாப் பகுதிகளிலுமிருந்து மேற்கோள்காட்டி நிறுவும் சிறப்பு ஒப்பிட்டுக்கூற முடியாத பெருமை வாய்ந்ததாகும்.

சுப்பிரமணியரை அறுமுகச் சிவம் என்றும் பரமசிவனை ஐம்முகச் சிவம் என்றும் சுவாமிகள் குறிப்பிடுவது மரபு. சுப்பிரமணியருக்குரிய பல பெயர்களையும் எடுத்துக்கூறி அப்பெயர்கள் யாவும் முருகனின் முழு முதற்றன்மையையே குறிக்கின்றன என்பதைச் சுப்பிரமணிய வியாசத்துள் சுவாமிகள் மிக அழகு பொருந்த எடுத்துக் கூறியுள்ள திறம் உளங்கொளற்பாலது.

சேய் எனில் புத்திரன் எனும் பொருள் கொண்டு சிவ பிரானின் புத்திரனாதலின் முருகப்பிரானுக்கப் பெயர் வாய்த்தது என்றே பலரும் எண்ணுவர். சுவாமிகள் அவ்வாறு கருதவில்லை.

"செவ்வாய் முருகன் இளமை புத்திரன்
இவ்வா றெல்லாம் சேயென இசைப்பர்"

என்பது சேந்தன் திவாகரம். இவ்வாறு மேற்கோட் கூறுவதுடன் அவற்றுள் முருகனுக்கே சேய் எனத் தனிப்பெயருண்டு என்று கூறி அப்பெயர்க்காரணமும் கூறுவர்.

'செம்மை' என்னும் பண்புப் பெயர் ஈறுபோய் 'செம்' என்று ஆயிற்று. முதனீண்டு பின்னர் 'சேம்' என்று வந்தது. பிறகு முன்னின்ற மகர மெய் யகர மெய் யாகத் திரிந்து அச்சொல்லே சேய் என்று ஆயிற்று எனப் பாம்பனடிகள் எழுதியருளிய திறம் மிகவும் உளங்கொண்டு மகிழற்பாலதாம். சேந்தன் என்பதும் செம்மைப் பண்பினடியாகப் பிறந்த பெயரே என்பதற்குச்

"செக்கரும் செம்மையும் சேந்து பாடலமும்"

என்ற பிங்கலந்தை அடியை எடுத்துக் காட்டி, ஈண்டுச் சேந்து என்பது செம்மைப்பண்பைக் குறிக்க வந்த சொல் எனத் தம் கோள் நிறுவும் முறை மிகவும் நினைந்து நினைந்து மகிழ்தற்குரியது.

இக்கருத்துக்கு அரண்செய்யாத பகுதிகளைச் சுவாமிகள் ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்ளாமையோடன்றி மறுத்து எழுதித் தம் கருத்தைத் தெளிவாக்கியுமுள்ளார்கள்.

வடமொழிக் கந்தபுராணம் தான் முருகப்பிரானை முழு முதற் பொருளெனப் போற்றத்தக்க நிலையில் உள்ளதென்பதும் பிறநூல்கள் யாவும் அதனை அடியொற்றி வந்தாலும் பின்னோர் வேண்டும் விகற்பம் கூறியதோடன்றி முருகப் பெருமான் முழுமுதற்றன்மைக்கும் குறைகள் கற்பிக்கின்றன என்பதும் சுவாமிகள் கருத்தாகும். அதனாற்றான் முருகப்பெருமானின் பெருமையைச் சிறிதும் குறையாது மக்களுக்குக் காட்டவல்ல நிலையில் குமார சுவாமியம் என்னும் சிறந்த நூலைப் பாம்பனடிகள் இயற்றியுள்ளார்கள். அது படித்து உணரத்தக்கதொரு சிறந்த நூலாகும்.

மேலும் பல்வேறு நூல்களில் காணப்பெறும் முருகப் பெருமானின் வரலாறுகள் குறித்தும் அவ்வரலாறுகளில் முருகப்பிரானின் முழுமுதற்றன்மைக்கு வரும் தடைகள் குறித்தும் அவற்றைக் களையவேண்டிய இன்றியமையாமை குறித்தும் சுவாமிகளைப்போல அழுத்தமாகவும் வெளிப்படையாகவும் இதுகாறும் எவரும் கூறிற்றிலர். பல்வேறு தலங்களுக்குரிய புராணங்களிலும் முருகப்பெருமான் பெருமை எவ்வாறு கூறப்பெறுகின்றது என்பதையும் சுவாமிகள் தாம் எழுதிய சுப்பிரமணிய வியாசத்துள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். இதிலிருந்து சுவாமிகள் எவ்வளவு அகன்றும் ஆழ்ந்தும் புலமைச் சிறப்புப் பெற்றுள்ளார்கள் என்பதைத் தெள்ளிதின் உணரலாம்.

கலியுகவரதனாய அம்முருகப்பெருமானின் பெருமையை அறிய விரும்புவோர் அவசியம் சுவாமிகளால் எழுதப்பெற்ற சுப்பிரமணிய வியாசம் என்னும் நூலை நன்கு ஓதி உணர்ந்து பலன் பெற்றுச் சிறந்தோங்குவார்களாக.

சமய உணர்ச்சி

(அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ.)

மக்கள் யாவரும் இவ்வுலகில் இன்பமாக வாழ விரும்புவது இயற்கை. அத்தகைய நோக்குடையோர் யாவரும் சமய உணர்ச்சியுடனும் தெய்வ நம்பிக்கையுடனும் தங்கள் வாழ்க்கையைச் செலுத்துதல் வேண்டும். இக்காலத்தில் சமய உணர்ச்சியும் தெய்வ நம்பிக்கையும் குறைந்துள்ளதால் தான் மக்கள் மன அமைதியை இழந்து துன்பத்திற்குள்ளாகி உழல்கின்றனர். சமயம் தான் மனிதன் வாழ்வாங்கு வாழ உறுதுணையாயிருக்கிறது. ஆகவே கட்டுப்பாட்டுடனும் கடமையுணர்ச்சியுடனும் கண்ணியமாகவும் வாழ விரும்பும் ஒவ்வொரு மனிதனும் சமய உணர்வுடையவனாகவும் தெய்வ நம்பிக்கையுடையவனாகவும் இருத்தல் மிக இன்றியமையாதது என்பது வெளிப்படை.

அதற்கு வழி யாது? நம் தெய்வத் தமிழால் பாடி முன்னரே இறையருளைப் பெற்ற அருளாளர்களின தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைப் பாடல்களை இசையுடனும் பொருளுணர்ந்தும் உறுதியான உள்ளன்புடனும் ஓதுதல் வேண்டும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவாரை இறையருள் நன்னெறிக் குய்க்கும் என்பது ஆன்றோர் உள்ளக்கிடக்கை. ஓதுபவரும் நன்னெறியடைதலோடு இப்பாக்களைப் பக்தியுடன் கேட்பவரும் நன்னிலையடைகின்றனர். நல்லொழுக்கம், தெய்வ நம்பிக்கை ஆதிய நற்குணங்கள் இயல்பாகவே படிந்து அதனால் அவர்கள் வாழ்வு இன்பமாய் மலரவும் இப்பாக்கள் வாய்ப்பை அளிக்கின்றன. இத்திருமுறைப் பாடல்களைப் பாடுவதால் தந்நலமும் பிறர்நலமும் ஆகிய இருவகை நன்மைகளும் கிடைப்பதோடு இம்மை மறுமை வாழ்வு நலன்களும் செம்மையாயப் பெற முடிகின்றது.

அதனால் நம் தமிழகத்துள்ள ஆங்காங்கு அதிக வருவாயுடைய திருக்கோயில்களில் எல்லாம் காலை அல்லது மாலையில் ஏறக்குறைய ஒரு மணி நேரமாவது ஒலிபெருக்கி மூலமாகத் தக்க ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு பாட அறங்காவலர்களும் கோயில செயலலுவலர்களும் தக்க

ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இளஞ்சிறுர்களின் பிஞ்சுள்ளங்களில் சினிமாப் பாடல்கள் நன்கு பதிந்து விடுகின்றன. அவ்வாறு பதியவிடாது இத்தகைய பத்திப்பாடல்களைப் பாடிக் கேட்கச் செய்யும் சூழ்நிலையை அமைத்துக் கொடுக்காதது பெரியோர்களின் மன்னிக்க முடியாத குற்றமேயாகும். இதனால் இளஞ்சந்ததியாரின் பிற்கால நிலை எவ்வளவு துன்பத்துக்குள்ளாகும் என்பதை நினைத்துப் பார்க்கவும் மிகவும் வருத்தம் மேலிடுகின்றது.

தக்க வருவாயில்லாத சிறு கோயில்களில் தேவாரம், திருவாசகம் ஆகிய திருமுறைப் பாடல்கள் கொண்ட இசைத்தட்டுகளைக் கொண்டு ஒலிபரப்பச் செய்து நம் திருமுறை மணம் திக்கெல்லாம் பரவச் செய்யலாம். இவ்வாறு நம் தெய்வத் தமிழ்த் திருமுறைகள் திக்கெல்லாம் பரவும் காலம் எக்காலமோ? அறிகிலேன். அக்காலமே பொற்காலம். மக்கள் மனம் மகிழ்ச்சியுற்று சமய உணர்வோடு நலமாய் வாழும் நற்காலமெனக் கூறலாம்.

மேலும் தமிழ்நாட்டிலுள்ள வானொலி நிலையத்தின் மூலம் நாள் தோறும் காலையில் ஒலிபரப்புச் செய்யப் பெற்று வரும் துதிப் பாடல்களின் நிகழ்ச்சியில் வாரத்திற்கு 3 நாள்களுக்காவது தேவாரத் திருமுறைப் பாடல்களையே ஒலிபரப்பச் செய்யவேண்டும். ஏனெனில் தமிழ்நாட்டில் பெரும்பான்மையோர் சைவ நன்மக்களேயாவர். மக்களின் இன்பத்தை மிகுதிப்படுத்தவே இவ்வானொலி நிலையம் இயங்குவதால் அது மக்கள் எண்ணத்திற்கேற்பச் செயல்பட்டால் நலமாயிருக்கும். வானொலி நிலையத்தார் சினிமாப் பாடல்களை அடிக்கடி ஒலிபரப்பி வருகின்றனர். மக்களிடமிருந்து அது பற்றித் தடைவராததாலும் மேலும் தங்களுக்கு எத்தகைய இசை வேண்டும் என்னும் விருப்பம் தெரிவிக்கப்படாததாலும் தற்போது மேற்கொள்ளும் கொள்கையே மக்கள் விருப்பத்திற்கியைந்தது என அவர்கள் கருத வாய்ப்புண்டு. ஆகவே தமிழகத்திலுள்ள சைவப் பெருமக்கள், சைவசபைகள், பொதுமன்றங்கள் முதலியன யாவும் திருமுறைப் பாடல்

களுக்கு அதிக இடம் கொடுக்க வற்புறுத்திக் கடிதங்கள் எழுதித் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். மாலையில் ½ மணி நேரமாவது குறிப்பிட்ட நேரத்தில் இப் பாடல்களுக்கு இடம் கொடுக்கலாம். இப்பாடல்களைப் பாடுவோருக்கு இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப் பின் பல இசைவாணர்கள் திருமுறைப் பாடல்களை உள முருகிப் பாடவல்லராதல் இயல்பாகவே அமையும். தற்போது மற்ற இசைவாணர்களுக்குள்ள பெருமையை வானொலி நிலையத்தார் ஓதுவார்களுக்குக் கொடுக்கின் றனரா என்பது மற்றொரு கேள்வி. தமிழ், தமிழிசை முதலியன வளம்பெற்றுப் புத்துயிரோடுலவிவரும் இக்கா லத்துப் பண்டைப் பண்முறையருமையோடு கூடிய நம் தெய்வத் திருமுறைகள் தக்க இடம்பெறவேண்டாவா? ஆகவே சமய உணர்ச்சி வேண்டும் பெரியோர்களே! வருங் காலம் நல்வாழ்வு மலர வேண்டுமேல் திருமுறைப் பாடல் களை வானொலி மூலம் அதிகநேரம்பாட வகைசெய்யவேண்டு மென்று உங்கள எண்ணத்தைத் தெரிவியுங்கள். அறங் காவலர் சங்கம் முதலிய சமய நிறுவனங்கள் யாவும் இச் செயலில் முந்தி ஒல்லும் வகையான் ஆவன செய்ய வேண்டு கின்றேன்.

வானொலி நிலையம் மக்கள் அரசால் மேற்கொள்ளப் பட்டுள்ள நிறுவனம். அது மக்கள் எண்ணத்தைச் செயல் படுத்தக் கடமைப்பட்டது. மக்கள் எண்ணங்களை மக்களே தெரிவிக்க வேண்டியவர்கள். ஆகவே செய்யவேண்டி யதைச் செய்யாது பிறரைக் குறைகூறிப் பயனில்லை. அதனால் எல்லோரும் அவ்வம்மாவட்டம், சிற்றூர் முதலிய எல்லாவிடங்களிலிருந்தும் திருமுறைப் பாடல்களுக்கு அதிக இடம் ஒதுக்க வேண்டுவதன் இன்றியமையாமையை வற்புறுத்திக் கடிதம் எழுத வேண்டுகின்றேன். நம் சமாஜ உறுப்பினர்கள் யாவரும் இச்செயலில் முயன்று ஆவன செய்வார்களாக. இது ஒரு தலைசிறந்த சமயப் பணியாகும். இப்பணியில சிறிது நாம் கவனக்குறைவாக இருப்போமேயானல் நம் பிற்காலச் சந்ததியினர் நல் லொழுக்கம், தெய்வ நம்பிக்கை, மன அமைதி முதலியன அற்றவர்களாவர் என்பதுறுதி. நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி வருமாறு:—

வானொலி நிலையத் தலைவர்,
ஆல் இந்தியா ரேடியோ,
மயிலாப்பூர்,
சென்னை — 4.

என்பதாகும். யாவரும் கடிதம் எழுதுவதுடன் அக்கடித நகலைச் சமாசச் செயலாளருக்கும் அனுப்பினால் சமாஜ மூலமாகவும் ஆவன செய்ய வாய்ப்பாயிருக்கும். எழுமின்! விழிமின்! செயலில் முற்படுமின். வாழ்க சமயம்.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே."

க. தியாகராசப்பிள்ளை அவர்கள் மறைவு.

ஆசிரியர்

சிறந்த சைவரும் சைவசித்தாந்த மகா சமாஜப் பேரன்பரும் ஆகிய திரு க. தியாகராசப் பிள்ளையவர்கள் கல்கத்தாவில் 15—11—69 இல் இதயக்கோளாற்றினால் காலமான செய்தியை அன்பர்கள் அறிந்திருப்பார்கள்.

அவர் தஞ்சை-வல்லம் என்ற கிராமத்தில் 20-9-1901 இல் பிறந்தார். திருச்சியில் படித்து பி. ஏ. பட்டம் பெற்றார். சில காலம் மாயூரத்தில் ஆசிரியராக வேலைசெய்த பிறகு பங்களூர் விஞ்ஞானக் கழகத்தில சேர்ந்து படித்து மின் பொறியியலில் தேர்ச்சி பெற்றார். அங்கிருந்து மூவாண்டு மானியம் பெற்று, ஓராண்டு இங்கிலாந்து மான்செஸ்டரிலும் ஈராண்டுகள் சுவீடனிலும் பயின்று, இந்தியா திரும்பி பம்பாயில் ஒரு மின்சார நிறுவனத்தில் வேலைக்கு அமர்ந்தார். பின்னர் கல்கத்தாவுக்கு உத்தியோக மாற்றம் பெற்று அங்கு புகழோடு வாழ்ந்தார்.

ஆரம்பம் முதலே அவருக்குத் தமிழிலும் சைவத்திலும் ஈடுபாடு மிகுதி. காங்கைத் தமிழ்ச்சங்கத்திலும் கல்கத்தாத் தமிழ்ச்சங்கத்திலும் பெரும் பங்கு கொண்டு ஏழை மாணக்

கருக்குப் படிப்பதற்காக நிரம்ப உதவி செய்தார். சமாஜத்தில் ஆயுள் உறுப்பினராயிருந்ததோடல்லாமல் ஆங்கில இதழுக்கு இருபதுக்கு மேற்பட்ட சந்தா சேர்த்தளித்து, வெளிநாடுகளுக்கும இப்பத்திரிகையை அனுப்பத் துணை செய்தார். 'தமிழ்ப்பண்பாடு' என்ற ஆங்கில இதழுக்கும் ஆயுள் உறுப்பினராயிருந்தார்.

சில ஆண்டுகளுக்குமுன் அவர் நோய்ப்பட்டு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில இருந்த போது, சமாஜத்துக்குப் பெருந் தொகை உதவிசெய்ய எண்ணியதுண்டு. எக்காரணத்தாலோ அவ்வெண்ணம் நிறைவேற வில்லை.

அவருடைய மனைவியார் டாக்டர் பாரதி அம்மையார் கல்கத்தாவில் புகழ்பெற்ற மகப்பேறு மருத்துவராகயிருக்கிறார். மகளும் வைத்தியத்துறையில் பட்டம் பெற்று இங்கிலாந்தில் மேல் படிப்புக்குச் சென்றிருக்கிறார். வங்காளியாகிய மருமகனும் மருத்துவ மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்றிருக்கிறார். புதல்வர் அருள் தியாகராஜன் என்பவர் மின் பொறித் துறையில் சுவீடனில் மேல்படிப்புப் படித்து வருகிறார்.

இப்பெரியாரது மறைவு குறித்து சமாஜமும் நாமும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைக் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நல்லவாழ்வு வாழ்ந்த இவர் தம் ஆன்மாவுக்கு இறைவன் திருவருள் பூரணமாய் இருக்குமென்பது உறுதி.

ஓர் அறிவிப்பு

நம் சமய சாத்திர சம்பந்தமாகவோ திருமுறை சம்பந்தமாகவோ அன்பர்களுக்கு ஏற்படும் ஐயங்களை வினவாக எழுப்பிச் சித்தாந்த ஆசிரியர் முகவரிக்கு சமாஜ அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அன்பர்கள் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். வந்த வினக்களுக்கு முறையாக விடைகள்

வெளியிடப்பெறும்; இதனால் சமயத் தெளிவு ஏற்பட ஏது வாதலோடு புரியாததைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பையும் அன்பர்கள் பெற இயல்கின்றது. முதலில் ஐயவினா என்ற தலைப்பிலும் அடுத்த இதழில் அவ்வினாவுக்கு விடையாக வந்த பதிலை ஐயந்தெளித்தல் என்ற தலைப்பிலும் வெளி யிடப்பெறும். சமாஜ அன்பர்கள் யாவரும் இம்முறையை நன்கு பயன்படுத்திச் சிறந்தோங்குவார்களாக.

ஐயவினா—1.

அப்பர் சுவாமிகளின் திருக்கயிலாயத் திருப்பதிகத்தின் 5 ஆம் பாட்டாகிய "ஊராகி நின்ற உலகே போற்றி" எனத் தொடங்கும் தாண்டகத்தில், இத்தொடக்கச் சொற் றொடருக்கும் "நீராவியான நிழலே போற்றி" என்னும் சொற்றொடருக்கும் பொருள் விளங்கவில்லை. அருள் கூர்ந்து இவற்றின் விளக்கங்களை எனக்கு நேரிலேனும் "சித்தாந்தம்" வாயிலாகவேனும் தெரிவிக்க வேண்டு கின்றேன்.

வல்லை பாலசுப்பிரமணியன்,
15, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை–1.

குறிப்பு.—தக்க வினாக்கள் தாம் வெளியிடப்பெறும். இதன் விடையை அடுத்த இதழில் காணலாம். அன்பர்கள் தக்க விடையினை எழுதினால் சிறந்ததை வெளியிட இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(துணையாசிரியர்)

பொன்மொழிகள்.

நீண்டநாள் வாழ்வது எவ்வாறு?

கொ. நீ. சி.

'லோட்சி' என்ற சீன தத்துவஞானி ஏறத்தாழ கி. மு. 570-ல் வாழ்ந்தவர். அவர் 'ஷாங் யாங்' என்ற தன் வயது முதிர்ந்த நண்பரைக் காணச் சென்றிருந்தார். உடல் நலத்

தோடு நீண்ட காலம் வாழ்தல் எப்படி என்பது பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. பின்னர் அவர்கள் பேச்சு பின்வருமாறு இருந்தது :-

லோட்சி :- தாங்கள் இவ்வளவு வயதாகியும் உடல் நலத்தோடு வாழ்கின்றீர்களே இதன் இரகசியம் என்ன ?

ஷாங் யாங் (தன் வாயை நன்ருகத் திறந்து):- பற்கள் ஏதாவது இருக்கின்றனவா ?

லோட்சி :- இல்லை.

ஷாங் யாங் :- என் நாக்கு இருக்கின்றதா ?

லோட்சி :- ஆம் நன்ருக இருக்கின்றது.

ஷாங் யாங் :- இப்போது பொருள் புரிகின்றதா ?

லோட்சி :- மென்மை வன்மையை வெல்லும். இதுதான் பொருள் என்று நினைக்கிறேன்.

ஷாங் யாங் :- ஆம். வாழ்க்கைத் தத்துவத்தைப் பற்றி நீ அறிந்துகொள்ளவேண்டியது இவ்வளவுதான்.

பண்டைத் தமிழ்ப் புலவர் பிசிராந்தையாரை இதே கேள்வி கேட்டபோது அவர் இறுத்த விடையும் இங்கு நினைவு கூர்தற்பாலது :—

யாண்டுபலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதிராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்ருேர் பலர்யான் வாழும்ஊரே.

புறநானூறு 191

மதிப்புரை

“*நீத்தல் விண்ணப்பம்*” (தெளிவுரையுடன்) என்னும் நூல் ஒன்று வரப்பெற்ருேம். இது காவேரிப்பாக்கத்தை அடுத்த இராமாபுரம் மாணிக்கவாசக மன்றத்தின் இரண்டாம் ஆண்டு விழா மலராக வெளியிடப் பெற்றது. கிடைக்கு

மிடம்:- திரு. R. K. சச்சிதானந்தம், 16, கிருஷ்ணமாச்சாரி தெரு, சுபாஷ் நகரம், குரோம்பேட்டை, சென்னை-44. என்பதாகும். விலை 25 காசுகள். தபால் செலவு 15 காசுகள் சேர்த்து அனுப்பின் அஞ்சல் மூலம் நூல் அனுப்பிவைக்கப் பெறும்.

இந்நூலில் இம்மன்றம் தோன்றிய வரலாறு, நீத்தல் விண்ணப்பம் பாடப்பெற்ற இடமாகிய திருவுத்தர கோச மங்கைத்தல வரலாறு, நீத்தல் விண்ணப்பம் 50 பாக்களின் பொழிப்புரை ஆகியவை காணப்படுகின்றன. பொழிப்புரை எழுதியவர் புலவர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ.,எம். ஓ. எல். அவர்கள் ஆவர். யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக. (அம்பை)

புலவர் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை மணிவிழா மலர் என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது திருவாளர் பிள்ளைவர்களின் நன்மக்களால் தம் தந்தையவர் களின் மணிவிழா நினைவாக வெளியிடப்பெற்றது. கிரௌன் அளவில் 96 பக்கங்கள் கொண்டது. விலை 0–50. தபால் கூலி வேறு.

இந்நூலில் திரு. பிள்ளையவர்களின் வாழ்க்கை வளம் பற்றிய வரலாற்றினைக் காணலாம். காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீன சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளுரையும் கொற்றவன் குடி உமாபதி சிவாச் சாரியாரால் இயறறப்பெற்ற திருவருட் பயனும் அதற்கு அருள்திரு அடிகளார் அவர்களால் இயற்றி உகவப்பெற்ற உரையும் இன்னும் இம்மலருக்கு மணத்தை அளிக்கின்றன. சைவப் பெருமக்கள் தம் வீட்டில் நிகழும் சிறப்புகளில் சமயம் பரப்பும் தொண்டிலு மீடுபடவேண்டும் என்பதற்கு இவ்வெளியீடு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாயுள்ளது.

வேண்டுவோர் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை, 44C/2, வேளாளர் தெரு, புரசைப்பாக்கம், சென்னை–7. என்னும் முகவரிக்கு எழுதி நூலைப் பெற்றுக்கொள்ளலாம். யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுக. (அம்பை)

முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது சென்னை, புலவர் மன்றத் தலைவர் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை யவர்களின் மணி விழா மலராக வெளிவந்துள்ளது. வெளியிட்டோர்:-யுனைடெட் பப்ளிஷர்ஸ், தெப்பக்குளம், திருச்சி–2. இது டிம்மி யளவில் 120 பக்கங்களுடன் முத்துக்குமாரசாமிப் பெம்மானின் திருவுருவப் படத்தையும் கொண்டு மிளிர்ந்துள்ளது. விலை ரூ. 1–80.

இந்நூலில் திரு. சண்முகம்பிள்ளை யவர்களைப் பற்றித் தக்கார் பலர் எழுதிய பாராட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ் மிகச் சிறந்த பிள்ளைத் தமிழ் நூல்களுள் ஒன்று என்பது யாவரும் அறிந்ததே. அதற்குத் திருச்சி இ. ஆர். உயர்பள்ளித் தமிழாசிரியர் புலவர் சு. அரங்கசாமியவர்கள் மிகச் செவ்விய முறையில் பொழிப்புரை, வினை முடிவு, விளக்கம், இலக்கணக் குறிப்பு, முதலியவைகளை எழுதியுள்ளார்கள். மாணவர்களும் படித்து விளங்கிக் கொள்ளும் அளவில் இவ்வுரை தெளிவாயமைந்துள்ளது. யாவரும் மேற்கண்ட முகவரிக்குத் திருச்சிக்கு எழுதி வாங்கிப் படித்துப் பயன்பெறுக.

(அம்பை)

புலவர் பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள் மணிவிழா நான்மணி மாலை என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். விலை 20 காசுகள். மேலும் அம்மணிவிழா நினைவாக வெளியிடப்பெற்ற பாராயணத் திரட்டு, சிவபுராணம் என்னும் நூல்களும் வரப்பெற்றோம். அஞ்சல் தலை 50 காசுகள் அனுப்பின் அனுப்பப் பெறும். (அம்பை)

காஞ்சி மெய்கண்டார் கழகச்சார்பில் சிவதல வார வழிபாடு 8-3-70, 15-3-70, 29-3-70 ஆம் நாள் பல திருக்கோயில்களில் சிறப்புற நிகழ்ந்தன. சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

சமாஜ வெளியீடுகள்

திருவாசகம் (எட்டாம் திருமுறை)	1	00
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)	1	00
சமாஜ 63-ஆம் ஆண்டு விழா மலர்	0	50
காயசித்தி	1	00
திருமந்திரச் சம்பிரதாயம்	0	50
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவு மலர்	1	00
முருகன் மூந்நூல் 0 50 அறுபத்து மூவர்	0	60
வைர விழா மலர் 2 00 அறப்பயிற்சி மாலை	0	50
சிவஞான போதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல — 120 காரணங்கள்	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு 0 75 பிரதோஷ வழிபாடு	0	20
நான் நம்புவன சில 0 10 விநாயகர் வழிபாடு	0	20
கூட்டு வழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி- பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி - யந்திர உரையுடன்	1	25
சிவஞான போதம் - எளியவுரை 2ஆம் பதிப்பு	1	00
திருவெம்பாவை - விசேட உரையுடன்	0	75

தபால்—ரயில் செலவு தனி

"சித்தாந்தம்"—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 50.

"சைவ சித்தாந்தா"—ஆங்கில முத்திங்கள் வெளியீடு.

ஆண்டுச் சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை—4.

சைவசித்தாந்த சாத்திர வகுப்பு

திருத்தவத்துறை (லால்குடி)

நம் சமாஜப் பேரன்பர் திரு. ஜி. வரதராஜப் பிள்ளை அவர்கள் வழக்கம்போல் லால்குடியில் தம்பாச்சியாப் பிள்ளை அறநிலையத்தில் 15-5-70 முதல் 29-5-70 முடிய 15 நாள் களுக்குச் சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு நடத்த ஏற்பாடு செய்துள்ளார்கள். நாள்தோறும் காலையில் (9-11) சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் சிவஞானபோத விளக்கம் கூறுவார்கள். மாலையில் (4-6) வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள் தேவார வகுப்பு நடத்துவார்கள். தமிழ் வித்துவான் அல்லது புலவர் பட்டம் பெற்றவர்களும் தமிழ், எம். ஏ. பட்டம் பெற்றவர்களும் இவ்வகுப்பில் கலந்து கொள்ளத் தகுதியுடையவர்களாவர். வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பெறுவோருக்கு உறையுளும் இருவேளை உண்டியும் அளிக்கப்பெறும். 30—4—70 க்குள் "திரு. ஜி. வரதராஜப் பிள்ளை பி. ஏ., 7, வடக்கு வீதி, லால்குடி, திருச்சி மாவட்டம்" என்னும் முகவரிக்கு விண்ணப்பம் செய்யக் கேட்டுக் கொள்கின்றோம்.

(செயலாளர்)

அறிவிப்பு

சித்தாந்தம் மதிப்புரைக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரண்டு படிகள் வீதம் அனுப்பி வைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (செயலாளர்)

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினரும், ஆயுள் உறுப்பினருமான சைவத்திருவாளர் புலவர் பி. சொ. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு 11—3—70 புதன்கிழமையன்று சென்னை புரசை 118 வேளாளர் தெருவிலுள்ள ஈசுவரி திருமண மண்டபத்தில் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா மிகச் சிறப்புற நிகழ்ந்தது. காலையில் வைதீகச் சடங்குகளும் மாலையில் புலவர் மன்றத்தின் சார்பில் பாராட்டு விழாவும் நிகழ்ந்தன. மணிவிழா நினைவாகத் 'திருவருட் பயன்' என்னும் சாத்திர நூல் வெளியிடப் பெற்றது. மேலும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர் கலிவெண்பா, பி. சொ. ச. நான்மணி மாலை, பாராயணத் திரட்டு, சிவபுராணம்முதலிய பல நூல்களையும் அன்பர்கள் பலரும புலவர் மன்றம் போன்ற பல அமைப்புக்களிலுள்ளாரும் வெளியிட்டுத்தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். சமாஜமும் மணிவிழாத் தலைவருக்குப் பொன்னாடை போர்த்தித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது.

மணிவிழாத் தம்பதிகள் எல்லா நற்பேறுகளும் பெற்று இன்னும் ஒரு நூற்றாண்டிருக்க எம் வழிபடு கடவுளாம் திருச்செந்திலாதிபன் திருவருள் பாலிக்க அவனருளையே வேண்டி வணங்குகின்றோம். மணிவிழாவின் நினைவாகச் சமாஜத்துக்கு மணிவிழாத் தலைவரின் வாழ்க்கைத் துணைவியார் திருவதி சிவகாமி சண்முகம் பிள்ளையவர்கள் ஆயுள் உறுப்பினரானார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாலாஜாபேட்டை ஸ்ரீ ஏகாம்பரநாதர் 38 ஆம் ஆண்டுப் பெருவிழாவை ஒட்டி அங்குள்ள தேவார சபையில் 13-3-70 முதல் 22-3-70 முடிய சமயச் சொற்பொழிவுகள் சிறப்புற நிகழ்ந்தன. பலர் கேட்டுப் பிறவிப்பயனெய்தினர்.

பிரம்பூர் குமரகுருபரர் மன்றச் சார்பில் 22-3-70 ஆம் நாள் சைதையில் திருக்கோயில் வழிபாடும் ஸ்ரீ குமரகுருபர

சுவாமிகள் பிரபந்தங்களின் சமயப் பிரசாரச் சொற்பொழிவும் சிறப்புற நிகழ்ந்தன.

சித்திரைத்திங்கள் சிறப்பு நாள்கள்

7 (20-4-70) அத்தம் — உமாபதி சிவாச்சாரியார் விழா
8 (21-4-70) சித்திரை – இசை ஞானியார் விழா
9 (22-4-70) சுவாதி — திருக்குறிப்புத்தொண்ட நாயனார் விழா
17 (30-4-70) சதயம் — திருநாவுக்கரசு நாயனார் விழா
22 (5—5-70) பரணி — சிறுத்தொண்ட நாயனார் விழா
24 (7—5-70) உரோகணி – மங்கையர்க்கரசியார் விழா
26 (9—5-70) திருவாதிரை—விறன்மிண்ட நாயனார் விழா

பாம்பன் - ஸ்ரீமத்: குமரகுருதாச சுவாமிகள் நூல்கள் தற்போது கிடைக்கக்கூடியவை:

சைவ சமய சரபம்	2	50
நாலாயிரப் பிரபந்த விசாரம்	1	00
சேந்தன் செந்தமிழ் மூலமும் உரையும்	1	50
செவியறிவுறூஉ	0	20
பாம்பன் - ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	1	50
சிறுநூற்றிரட்டு	1	25
ஸ்ரீமத் அருணகிநாத சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	0	30
சிவஞான தீபம்	0	50
சைவ மகிமையும் சுருக்க அனுட்டான விதியும்	0	50
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும், குரு சீட சம்பவ வரலாற்று வியாசமும்	2	50
சமயங்களைக் குறித்த வியாசம்	1	25
சுத்தாத்வைத நிர்ணயம்	0	50
பரிபூரணனந்த போதம்-சிவசூரியப்பிரகாசம் என்னும் உரையுடன	6	50
குமார சுவாமிய மூலமும் திருவிளையாடற் காண்டத்துப் பொழிப்புரையும்	7	50
சிவஞான தேசிகம் 1-வது கடவுளைக் குறித்த வியாசம்	1	25
சிவஞான தேசிகம் 2-வது தேவர்களைக் குறித்த வியாசம் முதலியன	0	60

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.